# சென்னை மாநகராட்சி

EDP CELL
13 MAR 2015
CORPORATION OF CHENNAI

## ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்

ஆண்டு சந்தா ரூ. 2,000/-

மலர் : 20 இதழ் : 1072 நாள் : 12 – 03 – 2015

பா.து.ந.க.எண்.பி3 / 2206 / 2013

சென்னை மாநகராட்சி
பாலங்கள் துறை

**மறு – ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

கீழ்கண்ட பணிக்கு மறு – ஒப்பந்தப்புள்ளி இ–டெண்டர் மூலமாக கோரப்படுகிறது.

| வ. எண் | கோப்பு எண். பணியின் விவரம் | பணியின் மதிப்பு | முன் வைப்புத் தொகை | ஒப்பந்ததாரர் பதிவு நிலை | ஒப்பப்படிவம் சமர்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 1. | **பா.து.ந.க.எண்.பி3 / 2206 / 2013** மண்டலம்–13, வார்டு–175 மற்றும் 176ல் உள்ள சர்தார் பட்டேல் சாலை மற்றும் டாக்டர். முத்துலட்சுமி சாலை சந்திப்பில் உள்ள மேம்பாலத்தை பராமரிக்கும் பணி. | 66,20,909.00 | 67,000/– | வகுப்பு –2–ல் பதிவு செய்த பாலம் கட்டுமான பணியில் முன் அனுபவம் வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் மட்டும் | 25.03.2015 பிற்பகல் 3.00 மணி வரை |

1. ஒப்பப்படிவங்கள் https://tntenders.gov.in/nicgep/app என்ற இணையதளம் மூலம் **23.03.2015 அன்று பிற்பகல் 3.00 மணி வரை** பார்க்கவும் பதிவிறக்கமும் செய்து கொள்ளலாம். இணையதளம் மூலம் ஒப்பங்களை சமர்ப்பிக்கும் ஒப்பந்ததாரர் **வகுப்பு 2–ல் பதிவு செய்த பாலம் கட்டுமான பணியில் முன் அனுபவம் வாய்ந்த ஒப்பந்ததாரர்களாக இருக்க வேண்டும்.** இதற்கான Digital Signature Certificate ஒப்பந்ததாரர் பெற்றிருக்க வேண்டும். மேலும், ஒப்பந்ததாரர் ஒப்பங்களை Digital Signature செய்த பிறகு மேற்கூறப்பட்ட இணையதளம் மூலம் மின்னணு வடிவத்தில் சமர்ப்பிக்க வேண்டும். வகுப்பு–2ல் பதிவு செய்த பாலம் கட்டுமான பணியில் முன் அனுபவம் வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் மற்றும் இதற்கான Digital Signature Certificate இல்லாத ஒப்பந்ததாரரின் ஒப்பங்கள் ஏற்கப்பட மாட்டாது.

2. ஒப்பந்ததாரர் **25.03.2015 அன்று மாலை 3.00 மணிக்கு** முன்னதாக இணையதளம் மூலம் ஒப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும். இணையதளம் மூலம் பெறப்படும் ஒப்பங்கள் **25.03.2015 அன்று மாலை 3.30 மணிக்கு** பாலங்கள் துறை அலுவலகத்தில் ஒப்பத்தில் பங்கு பெற விரும்பும் ஒப்பந்ததாரர் முன்னிலையில் இணையதளம் மூலம் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் விடுமுறையாக இருப்பின் அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் திறக்கப்படும்.

3. மேலே அட்டவணையில் குறிப்பிட்ட பணிக்கான முன்வைப்பு தொகையினை தேசியமயமாக்கப்பட்ட அல்லது ஷெட்யூல்டு வங்கியிலிருந்து வரைவு காசோலை அல்லது மாற்ற இயலாத வங்கி உத்தரவாதத்தினை ஒப்பம் செல்லதக்க காலத்திலிருந்து 90 நாட்களுக்கு குறையாமல் செல்லும்படியாகத்தக்கவாறு ஆணையர், சென்னை மாநகராட்சி என்ற பெயரில் சென்னையில் மாற்றத்தக்க வகையில் பெற்று, அதனை ஸ்கேன் செய்து இணையதளம் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. அசல் அல்லது சான்றளிக்கப்பட்ட ஆவணங்களுடன் முன்வைப்புத் தொகைக்கான அசல் வரைவு காசோலை அல்லது அசல் வங்கி உத்திரவாதத்தினை பாலங்கள் துறையில் ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலரிடம் **25.03.2015 அன்று மாலை 3.00 மணிக்குள்** சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்க தவறிய ஒப்பந்ததாரரின் ஒப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான திருத்தங்கள் / இணைப்புகள் ஏதேனும் இருப்பின் மேற்கூறப்பட்ட இணையதளம் மூலம் தெரிவிக்கப்படும்.

6. இவ்வொப்பத்தை காரணம் எதுவும் குறிப்பிடாமல் ரத்து செய்தவற்கு உரிய அதிகாரம் உள்ளது.

**மேற்பார்வை பொறியாளர் / சாலைகள் (ம) பாலங்கள்**